அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006

மேல்நிலை துணைத் தேர்வுகள் ஜூன் / ஜூலை 2026

அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் (Original Mark Certificates) வழங்குதல்

செய்திக் குறிப்பு

நடைபெற்ற ஜூன் / ஜூலை 2026 மேல்நிலை துணைத் தேர்வெழுதிய தனித்தேர்வர்கள் (மறுகூட்டல் / மறுமதிப்பீடு உட்பட), தங்களது அசல் மதிப்பெண் சான்றிதழ்களை / மதிப்பெண் பட்டியல்களை 13.10.2026 (**செவ்வாய்கிழமை**) முதல் அவர்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்களிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

1. புதிய நடைமுறையில் (மொத்தம் 600 மதிப்பெண்கள்) தேர்வெழுதியவர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ்கள் / மதிப்பெண் பட்டியல் வழங்கும் முறை

மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு துணைத்தேர்வுகளில் அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டும், மேல்நிலை முதலாம் ஆண்டு (600 மதிப்பெண்கள்) மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வுகளுக்கான (600 மதிப்பெண்கள்) மதிப்பெண் சான்றிதழ்கள் (Mark Certificates) தனித்தனியே வழங்கப்படும்.

மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்விலோ / இரண்டாம் ஆண்டு தேர்விலோ அல்லது இரண்டு தேர்வுகளிலுமோ முழுமையாக தேர்ச்சியடையாதவர்களுக்கு, அவர்கள் இரு தேர்வுகளிலும் பெற்ற மதிப்பெண்களை பதிவு செய்து அச்சிடப்பட்ட ஒரே மதிப்பெண் பட்டியலாக (Statement Of Mark) வழங்கப்படும். இம்மாணவர்கள் மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு தேர்வுகளில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்ற பின்னரே, அவர்களுக்கு மேற்காண் இரு தேர்வுகளுக்கான தனித்தனி மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

2. புதிய நடைமுறையில் (மொத்தம் 600 மதிப்பெண்கள்) மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வுகளை நேரடியாக தேர்வெழுதியவர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கும் முறை

மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வுகளை நேரடித் தனித்தேர்வராக தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற / தேர்ச்சி பெறாத தேர்வர்கள் அனைவருக்கும் (600 மதிப்பெண்கள்) மதிப்பெண் சான்றிதழ் (Mark Certificate) வழங்கப்படும்.

3. பழைய நடைமுறையில் (மொத்தம் 1200 மதிப்பெண்கள்) +2 தேர்வெழுதியவர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ் வழங்கும் முறை

பழைய நடைமுறையில் (1200 மதிப்பெண்கள்) நிரந்தர பதிவெண் (Permanent Register Number) கொண்டு தேர்வெழுதிய மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வர்கள், இதற்கு முந்தைய பருவங்களில் தேர்ச்சி பெறாத பாடங்களை, ஜூன்/ஜூலை 2026 துணைத் தேர்வில் எழுதி அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருப்பின், அவர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட அசல் மதிப்பெண் சான்றிதழ்களும், முழுமையாக தேர்ச்சி பெறாதவர்களுக்கு அவர்கள் தேர்வெழுதிய பாடங்களுக்கான மதிப்பெண் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

நிரந்தர பதிவெண் இல்லாமல் (மார்ச் 2016 பொதுத் தேர்விற்கு முன்னர்) மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வெழுதிய தேர்வர்கள், தற்போது ஜூன்/ஜூலை-2026 பொதுத் தேர்வெழுதி இருப்பின், அவர்கள் தேர்வெழுதிய பாடங்களுக்கான மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

ஓம்/-

இயக்குநர்

தேதி: 12.10.2026

இடம்: சென்னை – 600 006.